# TRINITY COLLEGE FOR WOMEN
# NAMAKKAL

## NEWS PAPER CLIPPINGS
## YEAR 2021

லி

கிரி
கால்
ன்ற
மாதி
ர்.
மாவ
ாளி
வண்
-ஆம்
டந்த
றப்ப
கவுண்
துக்கு
கால்ல
சென்
மோதி
விடத்
ரக்குப்
ாணக
ியைச்
ரித்து

... நிகழ்ச்சியில் சுரேஷ், ராஜா, தாமராஜ், செல்வம், சரவணக்குமார், வரதராஜ், அலெக்ஸ், கர்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# தேசிய கணிதவியல் தின கொண்டாட்டம்

**நாமக்கல், டிச. 24:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரி கணிதவியல் துறை சார்பில் தேசிய கணிதவியல் தினக் கொண்டாட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கணித மேதை ராமானுஜனின் 134-ஆவது பிறந்த நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங்கோடன் தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் கே. நல்லுசாமி முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எம்.ஆர். லட்சுமிநாராயணன், உயர்கல்வி இயக்குநர் அரசுபரமேசுவரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

எருமப்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் எம். கருணாகரன், பரமத்திவேலூர் கந்தசாமி கண்டர் மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் டி.கே.குமாரசாமி, வளையப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் எஸ். கார்த்திகேயன், அணியாபுரம் லிட்டில் ஏஞ்சல் மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் டி.யுவராஜா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

கணிதத் துறை பங்களிப்பிற்காக கணிதவியல் முத்திரையாளர் விருதுகள் கல்லூரி சார்பில் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கணிதம் குறித்த கோலப் போட்டிகள், கணிதம் குறித்த கருத்துரை, வினாடி--வினா மற்றும் ராமானுஜன் குறித்த போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை கணிதவியல் துறைப் பேராசிரியைகள் செய்திருந்தனர்.

தினமணி - 25/12/2021/நாமக்கல்

# ...ில் கொப்பரை விலை உயர்வு

யில், சபரிமலைக்குச் செல்லும் வழி யில் சரல்மேடு அருகே சென்றபோது மாரடைப்பு ஏற்பட்டதில் திங்கள்கி

வலை, அகில பாரத ஐயப்பா சேவா சங்கத்தின் நாமக்கல் மாவட்டச் செய லாளர் என்.ஜெகதீஸ் தெரிவித்தார்.

# நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரியில் தேசிய மின்னணு நூலகம் தொடக்கம்

நாமக்கல், டிச. 14: நாமக்கல் டிரினிடி மக ளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி யில் தேசிய மின்னணு நூலக மையத் தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங் கோடன் தலைமை வகித்தார். செயலா ளர் கே. நல்லுசாமி, முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் மற்றும் இயக்குநர் - உயர்கல்வி அரசு பரமேசுவரன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர்.

மேற்கு வங்க மாநிலம், கரக்பூரில் உள்ள இந்திய தொழில் நுட்பக்கழகமா னது (ஐஐடி) இந்த டிஜிட்டல் நூலகத் தினை வடிவமைத்துள்ளது. இதை மத் திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அங்கீகரித்துள்ளது.

பள்ளி, கல்லூரி மற்றும் ஆராய்ச்சி பாடப்பிரிவுகள் பயிலும் அனைத்து மாணவர்களும் அனைத்து நாள்களிலும் 24 மணி நேரமும் தனிப் பயன்பாட்டு பெயர் மற்றும் கடவுச்சொல்லோடு இந் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள லாம். இதற்கு எந்தவிதமான கட்டண மும் இல்லை. ஏறத்தாழ 5 கோடி தரவு கள் தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையா ளம் உள்ளிட்ட 11 மொழிகளில் நமக்குத் தேவையான புத்தகங்கள், ஆய்வுக்கட்டு ரைகள் மற்றும் பிற தகவல்களைப் பதிவி றக்கம் செய்து நாம் அவற்றை பயன்படுத் திக் கொள்ளலாம் என கல்லூரி நிர்வா கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
கிளை : எண்.56/3, முதல் தளம், MSRK டவர், பாரதி பூங்கா 2வது குறுக்கு,

# தசிய கணிதவியல் தினக் கொண்டாட்டம்

DIN | Published on : 23rd December 2021 11:10 PM | அ+ அ அ- | |

நாமக்கல் டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரி கணிதவியல் துறை சார்பில் தேசிய கணிதவியல் தினக் கொண்டாட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கணித மேதை ராமானுஜனின் 134-ஆவது பிறந்த நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங்கோடன் தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் கே. நல்லுசாமி முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எம்.ஆர். லட்சுமிநாராயணன், உயர்கல்வி இயக்குநர் அரசுபரமேசுவரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

எருமப்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் எம். கருன பரமத்திவேலூர் கந்தசாமி கண்டர் மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் டி.கே.கு வளையப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் எஸ். கார்த்திகேயன், அணையாபுரம் லிட்டில் ஏஞ்சல் மேல்நிலைப் பள்ளி கணிதவியல் ஆசிரியர் டியுவராஜா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

கணிதத் துறை பங்களிப்பிற்காக கணிதவியல் முத்திரையாளர் விருதுகள் கல்லூரி சார்பில் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கணிதம் குறித்த கோலப் போட்டிகள், கணிதம் குறித்த கருத்துரை, விநாடி-வினா மற்றும் ராமானுஜன் குறித்த போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை கணிதவியல் துறைப் பேராசிரியைகள் செய்திருந்தனர்.

# பெரியார் பல்கலைக்கழக தரப்பட்டியலில் டிரினிடி கல்லூரி மாணவியர் சிறப்பிடம்

By DIN | Published on : 09th December 2021 08:18 AM | அ+ அ அ- | 

தினமணி
10/12/2021
நாமக்கல்
பதிப்பு

**பெரியார் பல்கலைக்கழக தரப்பட்டியலில் (ரேங்க்) நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரி மாணவியர் 6 பேர் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.**

இதில், எம்.காம். பாடப் பிரிவில் பி.எஸ்.இந்து 4-ஆம் இடமும், எம்.ஏ. ஆங்கிலம் பாடப் பிரிவில் எம்.ரேகா 5-ஆம் இடமும், பி.எல்.சோனியா 8-ஆம் இடமும், ஏ.நௌஷத்பேகம் 9-ஆம் இடமும், எம்.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடப்பிரிவில் ஆர்.பிரகதி 6-ஆம் இடமும், பி.காம். சிஏ பாடப் பிரிவில் எல்.கீர்த்தி 6-ஆம் இடமும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.



பெரியார் பல்கலைக்கழகத் தேர்வில் தரப்பட்டியலில் சிறப்பிடம் பெற்ற மாணவியரை கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங்கோடன், செயலர் கே.நல்லுசாமி, முதல்வர் எம்.ஆர்.லட்சுமிநாராயணன், இயக்குநர்-உயர்கல்வி அரசுபரமேசுவரன், துறைத் தலைவர்கள் ஜி.செல்வலட்சுமி, எம்.சசிகலா, என்.இளமதி, ஆர்.நவமணி, கே.எஸ்.திவ்யா, பி.உமாபாரதி, நிர்வாக அலுவலர் என்.எஸ்.செந்தில்குமார் உள்ளிட்டோர் பாராட்டினர்.

## மேலும் இப்பிரிவில்

மரவள்ளிக்கிழங்கு விலை உயர்வு



அரசு பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: ஆசிரியர் கைது



அதிமுக ஆர்ப்பாட்டம்

கால்நடைகள நோய்களில் இருந்துபாது வழிமுறைகள அறிவுரை

TRENDING TODAY

பிரதமர் நரேந்திர மோடி

வரிக்குறைப்பு

TRENDING THIS WEEK

திங்களாழ்ச்ச நிஷ்ச்சயம்

நீர்வெளியேற்றம்

No omicron effect

ஒமைக்ரான்

நீதித்துறை சேவைத் தேர்வு

ADVERTISEMENT

தினமணி

01 டிசம்பர் 2021

புதன்கிழமை 10:56:01 AM

01 டிசம்பர் 2021

THE NEW INDIAN EXPRESS GROUP

தேடல்

சுடச்சுட

பயணத் தடைகள் மூலம் ஒமைக்ரான் பரவலை தடுத்துவிட முடியாது: உலக சுகாதார அமைப்பு

மேட்டூர் அணையிலிருந்து 11,000 கன அடி நீர் வெளியேற்றம்

ஒமைக்ரா கட்டுப்பா நிலையங்



செய்திகளை உடனுக்குடன் அறிய இணையுங்கள் தினமணி டெலிகிராம் சேனலில்!

இங்கே அழுத்தவும்

Join Dinamani Telegram Channel for latest News update

t.me/dinamaniofficial

# தேசிய பளு தூக்கும் போட்டி: நாமக்கல் டிரினிடி கல்லூரி மாணவி வெள்ளிப் பதக்கம் வென்றார்

By DIN | Published on : 01st December 2021 07:26 AM | அ+ அ அ- | |




தேசிய பளு தூக்கும் போட்டியில் பதக்கம் வென்ற மாணவி வே.மேனகாவை பாராட்டும் நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரி நிர்வாகத்தினர்.

தேசிய அளவிலான பளுதூக்கும் போட்டியில் நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரி மாணவி வே.மேனகா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

கோவா மாநிலம், மேட்கோ-நாவெளிம் நகரில், மனோகர் பாரிக்கர் மைதானத்தில் பளுதூக்கும் அமைப்பு சார்பில், தேசிய அளவிலான பளுதூக்கும் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. இதில் பல்வேறு மாநிலங்களில் இருந்து சுமார் 3,000 வீரர், வீராங்கனையர் கலந்துகொண்டனர்.




dition-dharmapuri/namakkal/2021/dec/01/...

இதில், நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரியில் 2-ஆம் ஆண்டு படிக்கும் மாணவி வே.மேனகா, 76 கிலோ எடை பிரிவில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் வென்றார். அவருக்கு கல்லூரி அரங்கில் செவ்வாய்க்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது.

இதில், கல்லூரித் தலைவர் பி.கே.எஸ்.செங்கோடன், செயலர் கே.நல்லுசாமி, முதல்வர் எம்.ஆர்.லட்சுமிநாராயணன், இயக்குநர் - உயர்கல்வி அரசு பரமேசுவரன், உடற்கல்வி இயக்குநர் வீ.அர்ச்சனா, ஆங்கிலத் துறைத் தலைவர்கள் கே.எஸ்.திவ்யா, பி.உமாபாரதி, நிர்வாக அலுவலர் என்.எஸ்.செந்தில்குமார், ஆங்கிலத் துறைப் பேராசிரியைகள், மாணவியர் ஆகியோர் பதக்கம் வென்ற மாணவி மேனகாவை பாராட்டினர்.

**மேலும் இப்பிரிவில்**

**நாமக்கல் கரோனா நிலவரம்**

**வீட்டுமனை பட்டா கோரி மனு**

**கரோனா- தருமபுரி**

**முன்னாள் ப... கவனத்துக்கு...**

TRENDING TODAY

மு.க.ஸ்டாலின்

சென்னை

சென்னை

ஒமைக்ரான்

பள்ளி விடுமுறை

செய்திகள் உடனுக்குடன்...
இணையுங்கள்
தினமணி டெலிகிராம் சேனலில்!
t.me/dinamaniofficial

நாமக்கல்

# ரத்த தான விழிப்புணர்வு

20th Nov 2021 11:40 PM

23/11/2021

ADVERTISEMENT



You May Like
A 26-Year-Old Girl From Bengal Became A Millionaire Overnight

நாமக்கல் டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியின் செஞ்சுருள் சங்கம், நாமக்கல் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு கட்டுப்பாட்டு மையம் ஆகியவை சார்பில், எய்ட்ஸ், காசநோய், ரத்த தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், நாமக்கல் மாவட்ட சுகாதார அலுவலர்கள் பி.மேரி லதாதாஸ்

ஆகியோர் பங்கேற்று பேசினர்.

யிட்ஸ் நோயின் தாக்கம், அதனைக் கட்டுப்படுத்தும் விதங்கள், காசநோயினால் நாம் எதிர்கொள்ளும் பிரச்னைகள், காசநோய்க்கான சிகிச்சை, ரத்த தானம் அளிப்பதால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகள் போன்றவை குறித்து விளக்கினர். இதில், கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங்கோடன், செயலர் கே.நல்லுசாமி, முதல்வர் எம்.ஆர்.லட்சுமி நாராயணன், இயக்குநர் - உயர்கல்வி அரசு பரமேசுவரன், செஞ்சுருள் சங்க அலுவலர் வீ.கோகிலா, நிர்வாக அலுவலர் என்.எஸ்.செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

Subscribe to Notifications

ADVERTISEMENT

## MORE FROM THE SECTION

முட்டை விலை 15 காசுகள் குறைந்தது



கோமாரி நோய் பாதிப்பால் கால்நடைகள் உயிரிழப்பு:நாமக்கல் மாவட்டத்துக்கு 20,000 தடுப்பூசிக் கொள்முதல்



நடமாடும் சி
முகாம்வாக

TRENDING TODAY

பொறியியல் பட்டம்

கல்... அணியும், ஐந்தாம் இடத்தை ஏற்காடு... அணியும் பிடித்தன. வெற்றிபெற்று சேலம் திரும்பிய ஆத்தூர் பாரதியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அணிக்கு தமிழ்நாடு கைப்பந்து கழக புரவலர் ராஜ்குமார், மாநில கைப்பந்து கழக தலைமையிட செயலாளர் சண்முகவேல், தொழிலதிபர் விஜயராஜ், பயிற்சியாளர்கள் ராஜாராம், பரமசிவம் ஆகியோர் பாராட்டு தெரிவித்தனர்.

# டிரினிடி மகளிர் கல்லூரியில் கரோனா தடுப்பூசி முகாம்

**நாமக்கல், அக். 23:** நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சுருள் சங்கம், கோனூர் - அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை சார்பில் கரோனா தடுப்பூசி முகாம் சனிக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கோனூர் - ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவர் பி.தீபா தலைமையில் 18 வயது நிறைவடைந்து இதுவரை கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 150 மாணவியருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் நாமக்கல் பகுதி பொதுமக்களும், இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத மாணவியரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டனர்.

இந்த முகாமில், கல்லூரித் தலைவர் பி.கே.எஸ்.செங்கோடன் தலைமை வகித்தார். செயலர் கே.நல்லுசாமி முன்னிலை வகித்தார். முதல்வர் எம்.ஆர்.லட்சுமிநாராயணன் வரவேற்புரை வழங்கினார். இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன் வாழ்த்துரை வழங்கினார்.

# ரூ. 40 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

**எடப்பாடி, அக். 23:** எடப்பாடியை அடுத்த கொங்கணாபுரம் பகுதியில்... வேளாண் விற்பனை சங்கத்...

ளுக்கு ரூ. 5.45 கோடி நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கரோனா தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளின்

மேலும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள ஊன்றுகோல் மையத்திலும் தொடர்பு கொள்ளலாம். தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்

கல்வி அலுவலா இரா.முருகன், மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரா.உமா மகேஸ்வரி உள்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெண் குழந்தைகள் தின கொண்டாட்டம்

**நாமக்கல், அக். 11:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம் மற்றும் நாமக்கல் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு ஆகியவை சார்பில், பெண்களுக்கான சமுதாய விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி அரங்கில் திங்கள்கிழமை நடைபெற்றது.

சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தையொட்டி நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வழக்குரைஞர் வீ.கனிமொழி கலந்து கொண்டு பேசினார். இந்நிகழ்வில் பங்கேற்ற மாணவியருக்கு சட்ட விழிப்புணர்வு குறித்த துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங்கோடன், செயலர் கே.நல்லுசாமி, முதல்வர் எம். ஆர்.லட்சுமிநாராயணன், இயக்குநர் - உயர்கல்வி அரசு பரமேசுவரன், மன்றப் பொறுப்பாளர்கள் ஆர்.சாவித்திரி, எம்.சசிகலா, எஸ்.ஜெயமதி, வீ.கோகிலா, என்.எஸ்.செந்தில்குமார், நாமக்கல் நீதிமன்ற அலுவலர் எம்.இளையபாரதி மற்றும் மாணவியர் கலந்துகொண்டனர்.



CUB
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை

றைவாக உள்ளது கண்டறியப்பட்டது. இதனையடுத்து, வழுபட்ட
யாளர்களான சக்திவேல், தமிழரசன், ஆர்.சக்திவேல் ஆகிய மூவரை
யும் முதுநிலை மேலாளர் பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

# உலக அகிம்சை தின உறுதிமொழி ஏற்பு

**நாமக்கல், அக். 1:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்க அமைப்பின் சார்பில், உலக அகிம்சை தின உறுதி மொழி ஏற்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. மகாத்மா காந்தி பிறந்த தினமான அக். 2 உலக அகிம்சை தினமாக அனுசரிக்கப்படுகிறது. அதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவியர், ஆசிரியர்கள், நிர்வாகத்தினர் பங்கேற்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன், செயலர் கே. நல்லுசாமி, முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன், இயக்குநர் - உயர்கல்வி அரசு பரமேசுவரன், செஞ்சிலுவை சங்க அலுவலர் ஆர்.சாவித்திரி, நிர்வாக அலுவலர் என். எஸ். செந்தில்குமார், உடற்கல்வி இயக்குநர் வீ.அர்ச்சனா உள்பட இளைஞர் செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

# கனமழை தொடருவதற்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

**நாமக்கல், அக். 1:** நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வானிலை ஆய்வு மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடந்த வார வானிலையை...

ஆட்சிய
அளிக்க
சேல
அலுவல
பட்ட
வெள்ளி
அப்போ
சேலப்
தியைத்
தனியார்
2020ஆம்
ரும் வ
கூறி விள
கரோ

சேலம்,
டத்தில்
தொற்று
றியப்பட்
சேலட
எடப்பா
நங்கவ

கொள்ளுமாறு விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங் அறிவுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட பிரதம மந்திரி

ளிலும், வெங்காயம் 6 பிர்க்காக்களிலும் காப்பீடு செய்து கொள்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடன் பெறாத விவசாயிகள் பொதுச் சேவை மையங்கள்,

டத்தில் நெல் (சம்பா) பயிருக்கு டிச. 15-ஆம் தேதிக்குள்ளும், வெங்காயம் பயிருக்கு நவ. 30 க்குள்ளும் காப்பீடு செய்து கொள்ளலாம். ஒரு ஏக்கருக்கு நெல் (சம்பா) பயிருக்கு ரூ. 519 வீதமும், வெங்காயம் பயிருக்கு ரூ.

லரின் அடங்கல், விதைப்புச் சான்று, செயல்பாட்டில் உள்ள வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் இணைத்து கட்டணத்தை

வேளாண்மை உதவி மற்றும் தோட்டக்கலை இயக்குநர் அலுவலகங்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

Dinamani - 21/09/2021 - தருமபுரி பதிப்பு - Namakkal ...

# தேசிய அளவில் தமிழ் விருதுகள்: நாமக்கல் மாணவிக்குப் பாராட்டு

**நாமக்கல், செப். 20:** தேசிய அளவில் பல்வேறு தமிழ் விருதுகளைப் பெற்ற நாமக்கல் டிரினிடி கல்லூரி மாணவிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பி.ஏ. ஆங்கிலப் பாடப்பிரிவு பயிலும் மாணவி ஏ. கோகுலப்பிரியா, பல்வேறு தமிழ் சார்ந்த விருதுகள் பெற்றமைக்காக திங்கள்கிழமை கல்லூரியில் பாராட்டு விழா நடைபெற்றது.

இதில், கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார். செயலர் கே. நல்லுசாமி முன்னிலை வகித்தார். முதல்வர் எம்.ஆர். லட்சுமிநாராயணன் மற்றும் இயக்குநர் - உயர் கல்வி அரசு. பரமேசுவரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



மாணவி ஏ.கோகுலப்பிரியாவுக்கு பாராட்டு தெரிவிக்கும் நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரி நிர்வாகத்தினர்.

இந்நிகழ்வில் கல்லூரி நிர்வாக அலுவலர் என். எஸ். செந்தில்குமார், ஆங்கிலத் துறைத் தலைவர்கள் கே. எஸ். திவ்யா, பி. உமாபாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கவியொலி, கலைச்சிகரம், செந்தமிழ் பணிச்செம்மல், சொல்லருவி போன்ற விருதுகளை சர்வதேச மற்றும் தேசிய அளவில் பல்வேறு தமிழ் அமைப்புகளிடம் இருந்து மாணவி கோகுலப்பிரியா பெற்றுள்ளார். மேலும், தொலைக்காட்சிகளில் தமிழ் சார்ந்த நிகழ்வில் பங்கேற்று தனது பேச்சுத் திறனை அவர் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்த்து–

## உணவு பாதுகாப்பு இயக்கம் சார்பில்

# டிரினிடி மகளிர் கல்லூரியில் மாணவியருக்கு கரோனா தடுப்பூசி

**நாமக்கல், செப். 10:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரி வளாகத்தில், கரோனா தடுப்பூசி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கோனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், நாட்டு நலப்பணித்திட்டம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சுருள் சங்கம் ஆகியவை சார்பில் நடைபெற்ற இந்த முகாமுக்கு கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் கே. நல்லுசாமி, நாமக்கல் தங்கம் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் ஆர். குழந்தைவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் வரவேற்றார். உயர்கல்வி இயக்குநர் அரசுபரமேசுவரன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நாமக்கல் கோனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவர் வீ. மதுபாலா தலைமையில் இத்தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

மத்திய, மாநில அரசுகளின் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தலின்படி, 18 வயது நிரம்பிய அனைவரும் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும். இந்நோக்கத்தின் அடிப்படையில் 18 வயது நிரம்பிய இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத கல்லூரி மாணவியர், நாமக்கல் சுற்றுவட்டார பொதுமக்கள் மற்றும் டிரினிடி கல்விக் குழும ஆசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இப்பணியினை கோனூர் ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர்கள் டி.முகமது ரபி, ஜெ. ஜெயக்கண்ணன், எஸ்.ஜானகி, எம்.மோகனா ஆகியோர் மேற்கொண்டனர். 150-க்கும் மேற்பட்டோர் முதலாம், இரண்டாம் தவணை தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டனர். இம்முகாமிற்கான ஏற்பாடுகளை கல்லூரி சேவை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் என். எஸ். செந்தில்குமார், ஆர். நவமணி, ஆர். சாவித்திரி, எம். சசிகலா, எஸ். ஜெயமதி, வீ. கோகிலா, ஜெ. பாரதி, ஆர். ஏ. அனிதா, என். சாந்தி, வீ. அர்ச்சனா ஆகியோர் செய்திருந்தனர்.



நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரியில் ஆர்வத்துடன் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்ட மாணவியர்.

தினமணி - 11/9/2021 - நாமக்கல் மாவட்ட பதிப்பு

தினமணி - 5. 9. 2021
நாமக்கல் மாவட்ட செய்தி



# டிரினிடி மகளிர் கல்லூரியில் ஆசிரியர் தின விழா



ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் நாமக்கல் டிரினிடி அகாதெமி தலைவர் ஆர்.குழந்தைவேல், கல்லூரி நிர்வாகத்தினர்.

**நாமக்கல், செப். 4:** நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரியில் சனிக்கிழமை ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங்கோடன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எம்.ஆர்.லட்சுமிநாராயணன் வரவேற்றார். கல்லூரி செயலர் கே.நல்லுசாமி முன்னிலை வகித்தார். டிரினிடி அகாதெமி தலைவர் ஆர்.குழந்தைவேல் ஆசிரியர்களை வாழ்த்தி பேசியதாவது:

நல்ல சமுதாயம் உருவாக காரணம் ஆசிரியர்கள் தான். ஒரு சாதாரண மனிதனை, மாமனிதனாக, சாதனையாளனாக உருவாக்குவது ஆசிரியர்களே என்றார்.

இதனையடுத்து, கல்லூரியில் நீண்ட காலம் சிறப்பாக பணியாற்றிய கல்லூரி உதவிப் பேராசிரியைகள் பி.லேனா, ஆர்.நவமணி, ஜி.செல்வலட்சுமி ஆகியோருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரியின் உயர்கல்வி இயக்குநர் அரசு பரமேசுவரன் தலைமையில் மாணவரின் ஒளிமயமான எதிர்காலத்தை நிர்ணயிப்பது ஆசிரியர்களா? பெற்றோரா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரிப் பேராசிரியர்கள் என்.எஸ்.செந்தில்குமார், வீ.கோகிலா, பி.லட்சுமி, எஸ்.அனிதா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

... சங்கத்தில்

வேலிடம் ஆட்சியர் ஸ்ரேயா பி.சிங் வழங்கி பாராட்டினார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ...ராஜ்குமார் தாகூர், மாவட்ட வருவாய் அலுவலர் துர்காமூர்த்தி, மருத்துவர் தீப்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**நாமக்கல் டிரினிடி கல்லூரி:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 75-ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார். செயலர் கே.நல்லுசாமி முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக தங்கம் மருத்துவ மனை இயக்குநர் மருத்துவர் ஆர். குழந்தைவேல் மற்றும் தீப்திமிஸ்ரா ஆகியோர் பங்கேற்றனர். அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் கல்லூரி உயர்கல்வி இயக்குநர் அரசு.பரமேசுவரன், பேராசிரியர்கள் ஆர்.நவமணி, எம். சசிகலா, எஸ்.ஜெயமதி, எம்.மாலதி, என்.எஸ்.செந்தில்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**ராசிபுரம் காங்கிரஸ்:** ராசிபுரம் நகர காங்கிரஸ் சார்பில் நடைபெற சுதந்திர தின விழாவில், நகர தலைவர் ஆர்.முரளி தலைமை வகித்தார்.

...Karur districts. A... that water would be rel... from the dam from August 15 to December 12 for 120 days.

*The Hindu 15·8·2021*

## ENGAGEMENTS

*COIMBATORE*

**ERODE**

**District administration**: 75th Independence Day celebration, District Collector H. Krishnanunni unfurls national flag and distributes welfare assistance, V.O.C. Park Ground, 9.05 a.m.

**Builders Engineering College, Kangeyam**: Independence Day celebration, 8 a.m.

**Kalingarayan Vaikkal Vivasaigal Mandram**: Deeparathanai Vizha, near Kalingarayan Canal Banyan tree, Kulavilakku, 9 a.m.

**SALEM**

**I-Day celebrations**

**Periyar University**, 9.30 a.m.

**Sri Vidya Mandir Higher Secondary School**, 9.20 a.m.

**NAMAKKAL**

**Trinity College for Women**, 8.30 a.m.

THE HINDU

DISCLAIMER: Readers are requested to verify and make appropriate enquiries to

---

பைக் கூட்டம் நடைபெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது கரோனா தொற்று அதிகமாக பரவும் சூழ்நிலை உள்ளதால் ஆக.15 ஆம் தேதி சுதந்திர தினத்தன்று நடைபெறவிருந்த கிராம சபைக் கூட்டம் ரத்து செய்யப்படுவதாக ஆட்சியர் செ.கார்மேகம் தெரிவித்துள்ளார்.

*தினமணி - 15/8/21 / நாமக்கல் [illegible]*

# பெரியார் பல்கலை. ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தேர்வு

**ஓமலூர், ஆக.14:** பெரியார் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெரியார் பல்கலைக்கழகத்தின் நிர்வாக முடிவுகளை எடுக்கக்கூடிய ஆட்சிக் குழுவில் (சிண்டிகேட்) கல்லூரி முதல்வர், ஆசிரியர் பிரிவிற்கான உறுப்பினர் பதவிகள் காலியாக இருந்தன. இப் பதவிகளை நிரப்பிடும் வகையில் வெள்ளிக்கிழமை பெரியார் பல்கலைக்கழகத்தில் தேர்தல் நடைபெற்றது.

இதில், கல்லூரி முதல்வர்கள் பிரிவில் ஓமலூர் பத்மவாணி கல்லூரி முதல்வர் ஆர்.ஹரிகிருஷ்ணராஜ், திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்லூரி முதல்வர் கார்த்திகேயன் ஆகியோரும், ஆசிரியர்கள் பிரிவில் நாமக்கல் டிரினிட்டி கல்லூரி பேராசிரியை செல்வலட்சுமி, கிருஷ்ணகிரி கிருஷ்ணா கல்லூரி பேராசிரியர் அறிவழகன் ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

இதற்கான சான்றிதழை துணைவேந்தர் இரா.ஜெகநாதன் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். அப்போது பதிவாளர் (பொ) கே.தங்கவேல் மற்றும் பேராசிரியர்கள் உடன் இருந்தனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்சிக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாகும்.

# சேலத்தில் 130 பேருக்கு கரோனா

**சேலம், ஆக. 14:** சேலம் மாவட்டத்தில் 130 பேருக்கு கரோனா தொற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டது.

சேர்க்கை நடைபெறுகிறது!

80722 03837, 98651 90157

"அனைவருக்கும் 75 வது சுதந்திர தின நல்வாழ்த்துகள்"

# டிரினிடி மகளிர் கல்லூரி

(கலை மற்றும் அறிவியல்)

டிரினிடி நகர், மோகனூர் சாலை, நாமக்கல் - 637 002

(சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் நிரந்தர இணைவுப் பெற்றது &

புதுதில்லி பல்கலைக்கழக மானியக் குழுவின் 2f மற்றும் 12b அங்கீகாரம் பெற்றது)

www.trinitycollegenkl.edu.in

9486761459, 9750966997, 8675444749, 8012355078, 9443966568, 9597311258

2021-22 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவியர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

## பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள்

| UG Courses | PG Courses |
|---|---|
| B.A., Tamil, English<br>B.Com., B.Com.(CA)., BCA<br>B.Sc., Mathematics, Physics, Chemistry, Computer Science, Nutrition & Dietetics and Costume Design & Fashion | M.A., Tamil, English<br>M.Com.,<br>M.Sc., Mathematics, Physics, Chemistry, Computer Science |
| Research Courses | M.Phil., English, Commerce & Computer Science |

தினமணி - 15/8/2021

தருமபுரி பதிப்பு

... மாலை 5.45 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் வளாகம், அறை எண்.126, மாவட்ட சமூக நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய அளவிலான ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

**நாமக்கல், ஜூலை 25:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத் துறையும், ஹரியாணா மாநிலம் சோனிபட் பகத்பூல்சிங் மகளிர் பல்கலைக்கழகமும் இணைந்து இரண்டு வார தேசிய அளவிலான இணைய வழி கல்வி முறை குறித்த ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்வினை அண்மையில் நடத்தியது.

29 மாநிலங்களில் இருந்து 29 பேராசிரியர்களைக் கொண்டு 29 தலைப்புகளில் தொழில்நுட்பம், புதுமை, இணைய வழிக் கல்வி முறைகள், இதற்கான செயலிகள், சர்வதேச அளவிலான கல்வித் தகவல் பரிமாற்றம், எதிர்காலக் கல்வி முறைகள் போன்ற தலைப்புகளில் இப்பயிற்சி நடைபெற்றது. பகத்பூல் சிங் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆர்.கே.அனாயத், பல்கலைக்கழக மானியக் குழுவின் மனித வளத் துறையின் இயக்குநர் ஷாபாலி நாக்பால், ஹரியாணா மாநிலத்தின் உயர்கல்வித் துறைத் தலைவர் பி.கே. குதியாலா, கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் துணை ஆட்சியர் சிவகுரு பிரபாகரன், சேலம் அரசு கலைக்கல்லூரியின் ஆங்கிலத் துறைப் பேராசிரியர் டி.அழகரசன், கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன், செயலர் கே.நல்லுசாமி, முதல்வர் எம். ஆர்.லட்சுமி நாராயணன், உயர்கல்வி இயக்குநர் அரசு பரமேசுவரன், ஆங்கிலத் துறைத்தலைவர் எஸ்.பூர்ணிமா, நிர்வாக அலுவலர் என்.எஸ்.செந்தில்குமார் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். இந்நிகழ்வில் 500-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# குற்றம் தடுப்பு தொடர்பான குறும்படம்: நாமக்கல் மாவட்ட காவல் துறை (மகளிர்...

தினமணி - 16-7-2021 - தர்மபுரி பதிப்பு - நாமக்கல் மாவட்ட செய்தி

# டிரினிடி மகளிர் கல்லூரியில் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாட்டம்

**நாமக்கல், ஜூலை 15:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியின் முதுகலை தமிழ்த் துறை, உள்தர உறுதி மையம், ஆராய்ச்சி மேம்பாடு, புத்தாக்க மையம், நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றின் சார்பில் 'கல்விக்கு கண் திறந்த காமராசர்' என்ற தலைப்பிலான வலையரங்க நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார். செயலர் கே. நல்லுசாமி, முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உயர்கல்வி இயக்குநர் அரசு பரமேசுவரன் சிறப்பு அழைப்பாளரை அறிமுகப்படுத்திப் பேசினார்.

இந்த வலையரங்க நிகழ்வின் சிறப்பு அழைப்பாளராக சென்னையிலிருந்து வெளிவரும் கலைமகள், மஞ்சரி ஆகிய வார இதழ்களின் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் கலந்து கொண்டு பேசியதாவது:

கர்ம வீரர், பெருந்தலைவர் என்ற சிறப்பு பெற்ற காமராசர் மிகவும் எளிமையானவராகத் திகழ்ந்தார். தமிழகத்திற்கு பல அணைத் திட்டங்களையும், தொழிற்சாலைகளையும் கொண்டு வந்தவர். சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை, எளிய மாணவர்களும் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக கிராமங்கள் தோறும் பள்ளிகளை உருவாக்கியவர். படிக்கும் மாணவர் எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்வியை பாதியில் விடக்கூடாது என்பதற்காக மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். 1962-ஆம் ஆண்டு அவருடன் இருந்த சில நண்பர்கள் ரூ. 5 லட்சம் இருந்தால் தமிழ்நாடு அரசின் செய்தித் திரைப்படம் எடுக்கலாம் என்று கூறியபோது அந்தப் பணத்தில் பள்ளிக்கூடம் கட்டுவேன் என தேசத்தின் நலனையே பெரிதாகக் கொண்டு வாழ்ந்தவர். இன்று பெரும் பதவிகளை வகித்து வரும் பலரும் அவர் தொடங்கிய பள்ளிகளில் படித்து வந்தவர்கள் தான் என்றார்.



சங்கர சுப்பிரமணியன்

இந்நிகழ்வில் தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் டி.கே. அனுராதா, ஆர். சாவித்திரி, எஸ்.ஜெயமதி, நிர்வாக அலுவலர் என்.எஸ். செந்தில்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாணவியருக்கு படிப்புடன் கூடிய ஓட்டுனர் பயிற்சி

## டிரினிடி மகளிர் கல்லூரி தலைவர் செங்கோடன்

நாமக்கல், சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள, மகளிர் மேம்பாடு அடையும் நோக்கத்தில், 2000ம் ஆண்டு, டிரினிடி மகளிர் கலை அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டது.

கடந்த, 19 ஆண்டுகளாக, 6,000க்கும் மேற்பட்ட, கிராமப்புற முதல் பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை கொண்ட இக்கல்லூரியில், தற்போது, 1,500க்கும் மேற்பட்ட மாணவியர், உயர் கல்வி படித்து வருகின்றனர்.

நடப்பு, 2021–22ம் கல்வி ஆண்டில், பி.ஏ., தமிழ், ஆங்கிலம், பி.சி.ஏ,, பி.காம்., பி.காம்., சி.ஏ., பி.எஸ்சி., பாடப்பிரிவுகளில், கணிதம், இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல், காஸ்டியூம் டிசைன், பேஷன் மற்றும் நியூட்ரிஷியன் , டயட்டிக்ஸ் ஆகிய இளநிலை பாடப்பிரிவுகள்.

முதுநிலை பாடப்பிரிவுகளில், எம்.ஏ., தமிழ், ஆங்கிலம், எம்.காம்., எம்.எஸ்சி., பாடப்பிரிவுகளில் கணிதம், இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல் ஆகியவை மாணவியருக்கு கற்றுத்தரப் படுகின்றன.



செங்கோடன்

. சேலம் பெரியார் பல்கலையின் நிரந்தர இணைவு பெற்ற இக்கல்லூரியானது, யு.ஜி.சி.,யின், 2எப் மற்றும் '12பி' அந்தஸ்தும் பெற்ற பெருமைக்குரியது.

சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள், 3,000 பேர் அமரும் கலையரங்கம், சிறந்த நூலகம் இவற்றோடு மாணவியர் பல்கலை பாடப்பிரிவு பயிலும் போதே, கணினி பயிற்சி, தட்டச்சு, டெய்லரிங், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனப்பயிற்சி, ஓட்டுனர் உரிமம் பெற்றுத் தருதல்.

கராத்தே, அரசுத் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள், ஆங்கில உரையாடல் மற்றும் எழுதும் பயிற்சி என கூடுதலாக அவர்களுக்கு கற்றுத் தரப்படுகிறது.

மாணவியர், கல்லூரிக்கு எளிதில் வந்து செல்ல கட்டணமில்லா பஸ்கள் நாமக்கல், கரூர், ராசிபுரம், ப.வேலூர், மோகனூர், வேலகவுண்டம்பட்டி, காளப்பநாய்க்கன்பட்டி, முசிறி, தொட்டியம், காட்டுப்புத்தூர், தாத்தையங்கார்பேட்டை போன்ற பகுதிகள், அதன் சுற்றுவட்டாரத்திலிருந்து இயக்கப்படுகின்றன. வெளியூர் மாணவியருக்கு விடுதி வசதியும் உள்ளன.




ஒகேனக்கல் நீர்வரத்து

"கொரோனா இல்லாத உலகை உருவாக்குவோம்"

"தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிதல் இவற்றோடு அடிக்கடி கைகளை சானிடைசர் கொண்டு கழுவிக்கொள்வோம்"

"கொரோனா பரவலை தடுக்க அரசின் அறிவுறுத்தலின்படி தடுப்பூசி போட்டுக்கொள்வோம்"

சமுதாயப் பணியில்

# டிரினிடி மகளிர் கல்லூரி

(கலை மற்றும் அறிவியல்)

டிரினிடி நகர், மோகனூர் சாலை, நாமக்கல்–637 002

9597311258, 9486761459, 9750966997, 8675444749, 8012355078, 9443966568.

2021-22-ம் கல்வி ஆண்டிற்கான மாணவியர் சேர்க்கை முன்பதிவு நடைபெற்று வருகிறது.

பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள்

| UG Courses | PG Courses |
|---|---|
| B.A., Tamil, English<br>B.Com., B.Com. (CA)., BCA<br>B.Sc., Mathematics, Physics, Chemistry, Computer Science, Nutrition & Dietetics and Costume Design & Fashion | M.A., Tamil, English<br>M.Com.,<br>M.Sc., Mathematics, Physics, Chemistry, Computer Science, |
| Research Courses | M.Phil., English, Commerce & Computer Science |

ம(
3/
போ
ஸ்பெ
202,
[AVR ரோ
போன்:

DINAMANI, Dharmapuri Ph: 268201; Fax: 04342-269207; RNI Reg. No. TNTAM/2010/36891, Published by R.K. Jhunjhunwala from 2nd floor, Neeva Co
COPYRIGHT :

தினமணி - 26.4.2021
தர்மபுரி பதிப்பு
நாமக்கல் மாவட்ட பதிப்பு

வில் பொங்கல் வைத்து அம்மனை வழிபட்டனர்.

# உலக பூமி தின கருத்தரங்கு

**நாமக்கல், ஏப். 22:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் உலக பூமி தினத்தை முன்னிட்டு 'பூமியைக் காப்போம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே.செங்கோடன் தலைமை வகித்தார். செயலாளர் கே.நல்லுசாமி முன்னிலை வகித்தார். முதல்வர் எம்.ஆர்.லட்சுமிநாராயணன் வரவேற்றார். இயக்குநர் - உயர்கல்வி அரசு பரமேசுவரன் சிறப்பு அழைப்பாளர்களை அறிமுகப்படுத்தி பேசினார். இளைஞர் செஞ்சிலுவை சங்க அலுவலர் ஆர். சாவித்ரி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

கோவை- பாரதியார் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் மற்றும் மக்கள் தொகையியல் துறை கௌரவப் பேராசிரியர் ஜி.பிரபாகரன் பங்கேற்று பேசினார். உதவிப் பேராசிரியர்கள் எம்.சசிகலா, ஆர்.ஏ. அனிதா, என்.எஸ். செந்தில்குமார், மாணவிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தினமணி 23/4/2021

# கோடை உழவு: விவசாயிகளுக்கு அறிவுரை

**ஓமலூர், ஏப். 22:** மானிய விலையில் கிடைக்கும் இடுபொருள்களைப்

# செலுத்திய தீயணைப்பு வீரர்கள்

மீது கடும்
டும் என
மெகராஜ்
ளார்.

செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நடை

தில் வேட்பாளர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

கரோனா

# டிரினிடி கல்லூரியில் தேர்தல் வாக்குப் பதிவு பட்டிமன்றம்




தேர்தல் வாக்குப்பதிவு தொடர்பான பட்டிமன்றத்தில் பங்கேற்ற மாணவியர்.

நாமக்கல், மார்ச் 19: நாமக்கல் டிரினிடி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம், வாக்காளர் விழிப்புணர்வு மையம் சார்பில் தேர்தலில் வாக்களிப்பது தன்மானத்திற்கா அல்லது சன்மானத்திற்கா என்ற தலைப்பிலான பட்டிமன்றம் வெள்ளிக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இதில் 100 சதவீத வாக்குப்பதிவு என்ற நோக்கத்தின் அடிப்படையில் சட்டப்பேரவைத் தேர்தலில் முதன்முதலாக தங்கள் வாக்குகளை செலுத்தும் மாணவியர் பயனடையும் வகையில் பட்டிமன்றம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார். செயலர் கே. நல்லுசாமி, முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள் எம். சசிகலா வரவேற்றார். வாக்காளர் விழிப்புணர்வை மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆர்.ஏ.அனிதா, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை ஆர்.தமிழ்செல்வி ஆகியோர் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினர். பட்டிமன்ற நடுவராக கல்லூரி உயர் கல்வி இயக்குநர் அரசு.பரமேசுவரன் கலந்து கொண்டார். தேர்தலில் வாக்களிப்பது தன்மானத்திற்கே என்ற தலைப்பில் பி.சுவாதி, ஏ.சாந்தினி, என். இலக்கியா, வீ.கிருத்திகா ஆகியோரும், தேர்தலில் வாக்களிப்பது சன்மானத்திற்கே என்ற தலைப்பில் ஆர்.ஜமுனப்பிரியா, எஸ்.சோபனப்பிரியா, ஜி.என். வசந்தரோஜா, எஸ் நிஷா ஆகியோரும் பேசினர். ஜனநாயகம் செழித்தோங்க தேர்தலில் வாக்களிப்பது அவரவரின் தன்மானத்தை காட்டுவதாகும் என நடுவர் தீர்ப்பு வழங்கினார். மாணவி எஸ்.ஜெயமதி நன்றி தெரிவித்தார். கல்லூரி நிர்வாக அலுவலர் என். எஸ். செந்தில்குமார் உள்பட கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

கோடக் மகிந்திரா வங்கி லிட்.

# தமிழ் விருதுகள் பெற்ற டிரினிடி கல்லூரி மாணவிக்குப் பாராட்டு

நாமக்கல், மார்ச் 13: நாமக்கல் டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஏ.கோகுலப்ரியா பி.ஏ., ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு பயில்கிறார். அண்மையில் மாநில அளவிலான தமிழ் விருதுகள் வழங்கும் விழா சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.



மாநில அளவிலான தமிழ் விருது பெற்ற மாணவியைப் பாராட்டும் டிரினிடி மகளிர் கல்லூரி தலைவர் பி.கே.செங்கோடன்.

இதில் நாமக்கல், டிரினிடி மகளிர் கல்லூரி மாணவி ஏ.கோகுலப்ரியா சிறந்த பேச்சாளராக தொடர்ந்து சாதனை புரிவதைப் பாராட்டி அவருக்கு 'சொல்லருவி' என்ற விருதும், கவிதை, கலைநிகழ்ச்சிகள் வழங்கியமைக்காக 'கலைச்சிகரம்' விருதும் மற்றும் சிறப்பாக தமிழ்ப் பணியாற்றி வருவதற்காக 'செந்தமிழ்ச் செம்மல்' விருதையும் உலக தமிழ் பண்பாட்டு அமைப்பு வழங்கி கௌரவித்தது.

இதற்கான பாராட்டு விழா டிரினிடி கல்லூரி அரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது. கல்லூரித் தலைவர் பி.கே.செங்கோடன், கல்லூரியின் செயலாளர் கே.நல்லுசாமி, முதல்வர் எம்.ஆர்.லட்சுமிநாராயணன், இயக்குநர்-உயர்கல்வி அரசுபரமேசுவரன் மற்றும் பேராசிரியர்கள் எஸ்.லதா, டி.கே.அனுராதா, எல்.தீபிகா, என்.எஸ்.செந்தில்குமார் உள்ளிட்டோர் பங்கேற்று மாணவி கோகுலப்ரியாவை பாராட்டினர்.

## பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும்

மாருதி நகரைச் சேர்ந்த ரமேஷ் என்பவரது மனைவி தனுஜா(40). இவர் ஜீவனாம்ச வழக்குத் தொடர்பாக திங்கள்கிழமை காலை நாமக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் உள்ள குடும்ப நல நீதிமன்றத்துக்கு வந்தார். அங்கு வழக்குத் தொடர்

செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் அவர் இறந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. நல்லிபாளையம் போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# தேசிய அறிவியல் தின விழா

**நாமக்கல், மார்ச் 1:** நாமக்கல் டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இயற்பியல் மற்றும் வேதியியல் துறை சார்பில், தேசிய அறிவியல் தின விழா திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார்.

செயலாளர் கே. நல்லுசாமி முன்னிலை வகித்தார். முதல்வர் எம்.ஆர். லட்சுமிநாராயணன் வரவேற்றார். இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன் வாழ்த்துரை வழங்கினார். இதில் 2050-இல் உங்களது கனவு உலகம் என்ற தலைப்பில் ஓவியப்போட்டி, நோபல் பரிசு பெற்ற அறிவியல் விஞ்ஞானிகள் என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி, அறிவியல் என்பது உண்மையான காவியம் என்றத் தலைப்பில் கட்டுரைப் போட்டி, வேதியியல் வினாடி வினா, அறிவியல் புதிய கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பிலான செய்முறைப் போட்டிகள் நடைபெற்றன.

மேலும், இதில் சர்.சி.வி.ராமன் அறிவியலுக்கு செய்த சாதனைகள் குறித்த திரைக்காட்சியும் இடம்பெற்றது. முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை துறைத் தலைவர்கள் பி.சுமதி, என்.தங்கமணி, நிர்வாக அலுவலர் என்.எஸ்.செந்தில்குமார், துறைப் பேராசிரியைகள் செய்திருந்தனர்.

# கெங்கவல்லி வட்டாட்சியர் பொறுப்பேற்

**தம்மம்பட்டி, மார்ச் 1:** கெங்கவல்லி வட்டாட்சியராக வெங்

கெங்கவல்லி சமூகநலத்துறை வட்டாட்சியராக இருந்த

ful Assembly,
said official sources.

passed away five months

## ENGAGEMENTS

### WOMEN'S DAY CELEBRATIONS :

**Sri Shanmugha College of Engineering and Technology, Salem**: 11 a.m.

**V.M.K.V Engineering College, Salem:** 10 a.m.

**Muthayammal Memorial College of Arts and Science, Rasipuram:** 10 a.m.

**Muthayammal Engineering Institutions, Rasipuram**: 2 p.m.

**Trinity College for Women, Namakkal**: 2 p.m.

**P.K.R. Arts College for Women, Gobichettipalayam:** 11 a.m.

**RD National College of Arts and Science, Erode:** 10 a.m.

**Builders Engineering College, Kangeyam:** 10 a.m.

### SALEM

**V.M.K.V. Engineering College:** Virtual campus drive, 2.30 p.m.

### NAMAKKAL

**K.S.Rangasamy College of Technology:** Webinar series on 'Database Management Systems', 5 p.m.

60, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of T
• ISSN 0971 - 751X • Vol. 53 • No. 56

The Hindu - 8/3/2021 - COIMBATORE EDITION

# கலைமாமணி விருதாளருக்கு பாராட்டு விழா



கலைமாமணி விருது பெற்ற தமிழறிஞர் அரசு.பரமேசுவரனை கௌரவிக்கும் டிரிடினி கல்விக் குழுமத்தினர்.

**நாமக்கல், மார்ச் 6:** நாமக்கல்லைச் சேர்ந்த தமிழறிஞர் அரசு.பரமேசுவரன் தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றதையொட்டி, நாமக்கல் டிரினிடி மகளிர் கல்லூரியில் சனிக்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார். செயலாளர் கே. நல்லுசாமி, டிரினிடி மெட்ரிக் மேல்நலைப்பள்ளித் தலைவர் ஆர். குழந்தைவேல் மற்றும் அதன் செயலர் டி.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் வரவேற்றார்.

கலைமாமணி விருதாளர் அரசு.பரமேசுவரன் பேசியதாவது:

மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நினைவாற்றலை வளர்த்துக் கொண்டு புதிது புதிதாக திறமைகளை, புதுமைகளை தங்கள் துறைகளில் புகுத்தினால் வெற்றி நம் வசமாகிவிடும். மாற்றம் தரும் இவ்வுலகில் புதிய விஷயங்களை அறிந்து கொள்வதால் நாம் மேன்மேலும் பல பாராட்டுகளையும், விருதுகளையும் குவிக்க முடியும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் டிரினிடி கல்விக் குழும இயக்குநர் பி.தயாளன், டிரினிடி மெட்ரிக் பள்ளி முதல்வர் பி.செல்வராஜ், துணை முதல்வர் ஆர். ரமேஷ், டிரினிடி கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினமணி - 7/3/2021 - நாமக்கல் பதிப்பு

robbed of his mobile phone by two men on Puttuvikki

The Hindu - 26/1/21

## ENGAGEMENTS

**REPUBLIC DAY**

**ERODE**

**District Administration:** District Collector C. Kathiravan hoists tricolour, V.O.C. Park Ground, 8 a.m.

**Sri Vasavi College (Self-Finance Wing):** college premises, 8.45 a.m.

**RD National College of Arts and Science:** college premises 10 a.m.

**SALEM**

**Periyar University:** University premises, 8.05 a.m.

**Sri Vidya Mandir HSS:** School premises, 9.15 a.m.

**NAMAKKAL**

**Sengunthar Engineering college:** College premises, 8.30 a.m.

**Trinity College for Women:** College premises, 8.30 a.m.

THE HINDU
DISCLAIMER: Readers are requested to verify

---

தம்மம்பட்டி, மரச்சிற்ப கைவினை கலைஞர்கள் சார்பில் சேலம் முதல் அக்ரஹாரம் வாசவி வசந்தா மஹாலில் 10 நாள்கள் நடைபெறும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள சிலைகள். நாள்: ஞாயிற்றுக்கிழமை

...சம் அணிந்தபடி கலந்துகொண்டு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்கி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# தேசிய உயர்கல்வி மதிப்பீடு கருத்தரங்கம்

**நாமக்கல், பிப். 14:** நாமக்கல் டிரினிட்டி மக ளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி யின் உள்தர உத்தரவாத மையம் சார்பில் மாற்றியமைக்கப்பட்ட தேசிய மதிப் பீடு மற்றும் தரச்சான்று என்ற தலைப் பிலான கருத்தரங்கு சனிக்கிழமை கல் லூரி அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் தலைமை வகித்தார். செயலர் கே.நல்லுசாமி, முதல்வர் எம். ஆர்.லட்சுமிநாராய ணன் மற்றும் இயக்குநர் - உயர்கல்வி அரசு பரமேசுவரன் ஆகியோர் முன் னிலை வகித்தனர். கல்லூரியின் உள் தர மதிப்பீட்டு மைய ஒருங்கிணைப் பாளர் என். இளமதி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக திண்டுக் கல் மாவட்டம் பழநி பழனியாண்ட வர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி யின் ஆங்கிலத் துறை உதவிப் பேராசி ரியை எஸ். மகாலட்சுமி கலந்து கொண்டு உரையாற்றினார்.

மேலும், கல்லூரியில் பயிற்றுவிக்கப் படும் பாடத்திட்டம், கற்பித்தல் முறை யில் உள்ள புதுமைகள், மாணவியர் சேர்க்கை, தேர்ச்சி விழுக்காடு, மாண வியருக்கான உடனடி வேலைவாய்ப்பு கள், கல்லூரி உள்கட்டமைப்பு வசதி கள், நவீன நூலகம், கல்லூரியில் செயல்படும் சேவை அமைப்புகள், பேராசிரியர்கள் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப்பணிகள், கல்லூரி மாணவியருக்கு போதிய இடைவெளியில் நடத்தப்படும் கருத்த ரங்குகள், பயிற்சி முகாம்கள், முன் னாள் மாணவியர் கல்லூரிக்கு அளித்து வரும் ஆதரவுகள் போன் றவை குறித்து இதில் விளக்கம் அளிக் கப்பட்டது.

இந்த கருத்தரங்கில் நிர்வாக அலுவ லர் என். எஸ். செந்தில்குமார், கணினி அறிவியல் துறைத் தலைவர் கே. வளர் மதி, உள்தர உத்தரவாத மைய உறுப்பி னர்கள் எஸ். தேவி, எம். மாலதி, ஜி. நித்யா, கே. மேகலா, பி.விஷ்ணுப்பி ரியா, என்.சாந்தி, பி.நந்தினி உள்பட 70-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## சந்தன மரங்கள் வெட்டிக் கடத்தல்:

இந்திய ரிசர்வ் வங்கி
மனிதவள மேம்பாட்டுத்துறை

...நடைபெற்ற விழாவில் சுவாமி மாடு முதலிடம் பெற்றது.

தினமணி 17/1/2021

# 'இளைஞர்களின் வழிகாட்டி சுவாமி விவேகானந்தர்'

நாமக்கல், ஜன. 16: நாமக்கல் டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம், செஞ்சுருள் சங்கம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் ஸ்வயம் ஆகிய அமைப்புகளின் சார்பில், சுவாமி விவேகானந்தர் பிறந்த தினம் செவ்வாய்க்கிழமை தேசிய இளைஞர் தின விழாவாக இணையவழியில் கொண்டாடப்பட்டது.

கல்லூரி அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குத் தலைவர் பி.கே. செங்கோடன் தலைமை வகித்தார். செயலாளர் கே. நல்லுசாமி, முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன், பேராசிரியர் அரசு.பரமேசுவரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக ஜம்மு-காஷ்மீர் சம்பா மாவட்டத்தில் உள்ள ஜம்மு மத்திய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்வியின் பேராசிரியர் ஜெ. ஜகநாதன் பங்கேற்றுப் பேசியதாவது:

மக்கள் தொகையில் 35 சதவீத இளைஞர்களைக் கொண்டது இந்தியா. சுவாமி விவேகானந்தர் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிடுகையில் 100 இளைஞர்களைத் தாருங்கள், இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன் என்றவர். இளைஞர்களின் முக்கியத்துவத்தை உலகம் முழுவதும் கொண்டு சென்றவர். விவேகானந்தர் வாழ்ந்தது 39 ஆண்டுகள்தான். அவர் புத்தகங்களைப் படித்தால் தன்னம்பிக்கைப் பிறப்பதோடு தாய் நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் நமக்குத் தோன்றும் என்றார்.

நிகழ்ச்சியில் டிரினிடி அகாதெமி தலைவர் ஆர். குழந்தைவேல், செயலாளர் டி. சந்திரசேகரன், கல்லூரியின் ஸ்வயம் அமைப்பின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தர்மபுரி பதிப்பு
நாமக்கல் மாவட்ட செய்தி பகுதி

காலைக்கதிர்
தேதி: 1.3.2021
நாமக்கல் பதிப்பு



# WANTED

## TRINITY COLLEGE FOR WOMEN

(Arts and Science)

Trinity Nagar, Mohanur Road, Namakkal – 637 002 (TN).
Website - www.trinitycollegenkl.edu.in
Mobile No – 9597311258 & 9486761459, Email id – triniprincipal@gmail.com
(Permanently Affiliated to Periyar University, Salem & Recognized by UGC, New Delhi under the section of 2f and 12b of UGC Act, 1956)

**Female Faculty required for the departments of**

**English, Commerce, Mathematics and Statistics**

**Qualification – As per UGC Norms**

- Experienced candidates, who have passed NET/SET or Ph.D., are preferred.
- High salary and Excellent Working Conditions.
- To apply immediately

**Chairman**



காலை 6:30க்குள் உங்கள் கையில்

தினமணி தேதி: 1.03.2021 தருமபுரி பதிப்பு

# TRINITY COLLEGE FOR WOMEN

**(Arts and Science)**

Trinity Nagar, Mohanur Road, Namakkal – 637 002 (TN)
Website - www.trinitycollegenkl.edu.in, Mobile No – 9597311258 & 9486761459,
Email id – triniprincipal@gmail.com
(Permanently Affiliated to Periyar University, Salem & Recognized by UGC, New Delhi under the section of 2f and 12b of UGC Act, 1956)

**Female Faculty required for the departments of**
**English, Commerce, Mathematics and Statistics**

**Qualification – As per UGC Norms**

* Experienced candidates, who have passed NET/SET or Ph.D., are preferred.
* High salary and Excellent Working Conditions.
* To apply immediately

**Chairman**

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா Union Bank of India
A Government of India Undertaking
Andhra Corporation
மண்டல அலுவலகம் : திருப்பூர். நடப்பு முகவரி : எண்.581/1, டி.பி.ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர் - 641 002.
போன் : 0422-2542150. இ-மெயில் : law.rotiruppur@unionbankofindia.com
அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறை &

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

& சுற்றுலாத்துறை வழங்கிய உயரிய விருதான

# "கலைமாமணி"

விருது பெற்ற

பேராசிரியர் முனைவர் **அரசுபரமேசுவரன்**

(உயர்கல்வி இயக்குநர் - டிரினிடி மகளிர் கல்லூரி)

அவர்களை



**வாழ்த்துகிறோம்...**

டிரினிடி மகளிர் கல்லூரி (கலை & அறிவியல்)

டிரினிடி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

டிரினிடி பன்னாட்டுப்பள்ளி (CBSE)

டிரினிடி நகர், மோகனூர் ரோடு,

நாமக்கல் - 637 002

தினமணி தருமபுரி பதிப்பு தேதி: 15.03.2021

# கம்பன் கழகம் சார்பில் தமிழறிஞருக்கு பாராட்டு விழா



தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற அரசு.பரமேசுவரனை கௌரவிக்கும் கம்பன் கழகம் மற்றும் தமிழ்ச் சங்க நிர்வாகிகள்.

**நாமக்கல், மார்ச் 14:** தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற தமிழறிஞர் அரசு.பரமேசுவரனுக்கு நாமக்கல் கம்பன் கழகம் சார்பில் சனிக்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது.

நாமக்கல்லைச் சேர்ந்த இலக்கியவாதியும், பட்டிமன்ற பேச்சாளரும், தமிழறிஞருமான அரசு.பரமேசுவரனுக்கு அவரது சேவையைப் பாராட்டி தமிழக அரசு சார்பில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அண்மையில் கலைமாமணி விருது வழங்கி கௌரவித்தார்.

அதையடுத்து, நாமக்கல் கம்பன் கழகம், தமிழ் சங்கம், ஆன்மிக வேள்வி ஆகியவை சார்பில் சனிக்கிழமை பிற்பகலில் நாமக்கல் சனு இன்டர்நேஷனல் ஹோட்டலில் அவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. இதில் தமிழ்ச் சங்கத் தலைவர் இரா.குழந்தைவேலு தலைமை வகித்தார்.

பசுமை நாமக்கல் தலைவர் தில்லை சிவக்குமார் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக நூலாசிரியர் முத்தையா, டிரினிடி கல்லூரி தலைவர் பி.கே.செங்கோடன், தொழிலதிபர்கள் சத்தியமூர்த்தி, கே.கே.பி.நல்லதம்பி, முருகேசன், ராமசீனிவாசன், என்.கே.வெங்கடாசலம், பாரதி கல்வி நிறுவனங்களின் இயக்குநர் சாரதாமணி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர்.

அதைத்தொடர்ந்து கலைமாமணி விருது பெற்ற அரசு.பரமேசுவரன், அவரது மனைவி துளசிமணி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். விழாவில் அரசு. பரமேசுவரன் பேசியதாவது:

தொடர்ந்து 40 ஆண்டுகளுக்கும் மேலாக பள்ளி முதல் கல்லூரி வரையில் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், பட்டிமன்றம் மூலம் மாணவர்களிடம் மொழி ஆர்வத்தை ஏற்படுத்திய வகையிலும், பல்வேறு இலக்கிய சொற்பொழிவுகளை ஆற்றியதற்காகவும் எனக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.